# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண். 5/2011 மற்றும் அசல் வழக்கு எண். 92/2016

வா.சா.1- குறுக்கு விசாரணை - நாள் 22-11-2023.
பெயர் = கருப்பசாமி வா.சா.-1
வா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.-

(1) தாவாச் சொத்து சம்மந்தமாக எத்தனை வழக்குகள் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் வழக்கு சொத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்துக்களுக்கு நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். 1வது லக்க சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் சொச்சம் என்கிறார் சாட்சி. 2வது லக்க சொத்தின் விஸ்தீரணம் 22 சென்ட் என்கிறார் சாட்சி. 1வது லக்க சொத்தின் பைமாஸ் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. 1வது லக்க சொத்தின் வடக்கே என்ன உள்ளது என்றால் கமுதி ரோடு உள்ளது. கிழக்கே சங்கரதேவர், வேலாயியம்மாள், சுப்பம்மாள் இடம் உள்ளது. தெற்கே சாத்தரப்பன் செட்டியார் வகையறா, மேற்கே சாயல் குடி ரோடு உள்ளது. 2வது லக்க சொத்துக்கு வடக்கே அருப்புக்கோட்டை ரோடு உள்ளது. கிழக்கே பால்ச்சாமி செட்டியார், சாத்தரப்பன் வகையறா புஞ்சை.தெற்கே சோலையப்பன் செட்டியார் புஞ்சை, மேற்கே அருப்பக்கோட்டை ரோடு உள்ளது. தாவா 1, 2 லக்க சொத்துக்கள் ஆதியில் யாருக்குப் பாத்தியம் என்றால் மகாலிங்க செட்டியார், அழகிரி செட்டியார் ஆகியோருக்குப் பாத்தியம் என்கிறார் சாட்சி. மேற்படி இருவருக்கும் ஆதியில் தாவாச் சொ்தது பாத்தியம் என்பதை காண்பிக்க எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை என்கிறார் சாட்சி.

(2) நான் இரண்டு வழக்குகளையும் தும்முசின்னம்பட்டி, ராமலிங்க சன்யாசி தர்மபரிபாலன மடம் அதன் டிரஸ்டி என்ற நிலையில்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி மடத்தின் டிரஸ்டி என்பதைக் காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிவு செய்யப்பட்ட ஆவணம் இல்லையென்றும், தீர்மானப்புத்தகம் உள்ளது என்றும் சாட்சி சொல்கிறார். வா.சா.ஆ.-12 தீர்மானப் புத்தகம்தான் நான் டிரஸ்டி என்பதைக் காட்டக்கூடியதா? என்றால் ஆமாம். எந்த தேதியில்

என்னை டிரஸ்டியாக தேர்ந்தெடுத்தார்கள் என்றால் 09-01-1984ம் தேதி தேர்ந்தெடுத்ததாக சாட்சி சொல்கிறார். ஆனால் நான் தாக்க்ல் செய்துள்ள வா,சா.ஆ.-12 தீர்மானப்புத்தகம் 08-01-1986ம் தேதியிலிருந்துதான் உள்ளது என்றால் சரிதான். 08-01-1984ம் தேதி தீர்மான புத்தகத்தை நான் தாக்கல் செய்தால்தான் நான் எந்த தேதியில் டிரஸ்டியாக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்பது தெரியவரும் என்றால் 08-01-1986ம் தேதியில்தான் நான் டிரஸ்டியாக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றும், 09-01-1984ல் டிரஸ்டியாக தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும் சாட்சி தற்போது சொல்கிறார். வா.சா.ஆ.-12 ஐ சாட்சியிடம் காட்டி இதில் எந்தப் பக்கத்தில் நான்டிரஸ்டியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விபரம் உள்ளது என்று 3, 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டபோது, சாட்சியால் ஆவணத்தைப் பார்த்து பதில் சொல்ல இயலவில்லை. வா.சா.ஆ.-12 ன் அசலை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க கொண்டுவரவில்லை என்றால் சரிதான். அடுத்த வாய்தாவில் நான் கொண்டுவர தயாராக உள்ளேன் என்கிறார் சாட்சி.

வா.சா.ஆ.-12 தீர்மான புத்தகத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு ஆஜராகும் பொருட்டு சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

மறு விசாரணை- இல்லை.